செ.வெ.எண்.273/2009/செமதொஅ நாள்: 02.09.2009

**மக்களின் தேவைகளை அறிந்து அதனை நிறைவேற்றுகின்ற அரசுதான் கலைஞரின் அரசு - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் பேச்சு.**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சியில் தமிழக முதலமைச்சரின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் விழா மற்றும் புதிய பள்ளிக் கட்டட திறப்பு விழா நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு 810 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கியும், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடத்தையும், அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலக கட்டடத்தினையும் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார்.

“ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தேர்தலுக்கு முன்பு நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்திலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவோம் என்று அறிவித்தார். எதிர்கட்சிகள் அதனை ஏளனம் செய்தன. ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு ஒவ்வொரு ஊராட்சியாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் 58,21,716 குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 44 ஊராட்சிகளில் 24 ஊராட்சிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 20 ஊராட்சிகளுக்கு இன்னும் ஆறு மாத காலத்திற்குள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். இதன் மூலம் படிக்காத பாமர மக்களும் உலகச் செய்திகளையும், நாட்டு நடப்புகளையும் அறிந்து கொள்ள முடியும்.

கடந்த 3 ஆண்டு கால ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் தேர்தல் அறிக்கையில் தெரிவித்த அனைத்து வாக்குறுதிகளும் 100 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தினை சேர்ந்த ஏழை, எளிய மக்கள் வயிறார பசியார வேண்டும் என்பதற்காகவே ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியினை வழங்கி வருகிறார். தமிழகத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் அனைவருக்கும் இலவசமாக வீட்டுமனை பட்டாக்களை வழங்கிய ஒரே தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர். தமிழகத்தில் 7.5 லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 46 ஆயிரம் குடும்பங்களுக்கு ரூ.700 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த கால ஆட்சியில் பணி நியமன தடைச்சட்டத்தினால் 3.5 இலட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றப்பிறகு பணி நியமன தடையாணை நீக்கப்பட்டு 3.5 இலட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் அரசு போக்குவரத்து கழகங்களில் நடத்துனர் மற்றும் ஓட்டுநர்களாக 25 ஆயிரம் பேர் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். 10 ஆயிரம் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் போக்குவரத்துக் கழகத்தில் 350 பேரும், சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் 320 பேரும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஏழை-எளிய மக்களின் உயிர்காக்கும் வகையில் கலைஞர் காப்பீட்டு திட்டம் என்ற புதிய காப்பீட்டு திட்டத்தினை கொண்டு வந்துள்ளார். இதன் மூலம் தமிழகத்தில் உள்ள ஒரு கோடி ஏழை-எளிய குடும்பங்கள் ரூ.1 இலட்சம் வரை மருத்துவ காப்பீடு பெறலாம். இத்திட்டத்திற்கான பிரீமியத் தொகை ரூ.570 கோடியை தமிழக அரசே செலுத்தியுள்ளது. இத்திட்டத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் ஆண்டு வருமானம் ரூ.72 ஆயிரத்திற்கு குறைவாக உள்ள அனைவரும் உறுப்பினராக சேரலாம். இருதய நோய், சிறுநீரக நோய் போன்ற நோய்களுக்கு தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று பயன் பெறலாம்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சியில் பத்தாம் வகுப்பு வரை படித்த ஏழை-எளிய பெண்களுக்கு திருமண உதவித்தொகையாக ரூ.20 ஆயிரமும், கர்ப்பிணி பெண்களுக்கு உதவித்தொகையாக ரூ.6 ஆயிரமும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழகத்தில் 1,62,738 ஏழை பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.244 கோடியும், 11,47,065 கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித்தொகையாக ரூ.530 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. நகர்புற மக்களை போல கிராம மக்களும் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெறவேண்டும் என்பதற்காகத் தான் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். இத்திட்டத்தின் மூலம் ஆண்டிற்கு 2500 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதனைக் கொண்டு சிமெண்ட் சாலைகள், சோடியம் விளக்குகள், நூலகம், பூங்கா, மயானம் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இது போன்று ஏழை-எளிய மக்களின் தேவைகளை உணர்ந்து அதனை நிறைவேற்றுக்கின்ற அரசாக கலைஞரின் அரசு திகழ்கிறது. தனது 87 வயதிலும் தமிழக மக்களுக்காக அயராது உழைக்கின்ற ஒரே தலைவர் முதல்வர் கலைஞர் ஆவார். அவருக்கு மக்கள் அனைவரும் துணை நிற்க வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட வேளாண் விற்பனைக்குழு உறுப்பினர் திரு.க.கண்ணப்பன், ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.ஏ.மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.மல்லிகா முனுசாமி வரவேற்றார். நிறைவாக ஊராட்சி உதவியாளர் கே.ஜெபராஜ் நன்றி கூறினார். அனைவருக்கும் கல்வித் திட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.சரஸ்வதி, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் திருமதி.பி.ராணி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் திரு.மு.ராகவன், திருமதி.ரீட்டா செல்வசீமான், குன்றத்தூர் ஒன்றியக்குழு துணைத்தலைவர் திருமதி.சுஜாதா பாஸ்கரன், ஒன்றியக்குழு உறுப்பினர் திருமதி.சித்ரா நித்யாநந்தம், திருமுடிவாக்கம் ஊராட்சி மன்றத்தலைவர் திரு.சி.இல.முருகன், ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் திரு.சங்கர், திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் திரு.டி.மோகன்ராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.கே.சசிகலா, திருமதி.நாகரத்தினம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக திருமுடிவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவில் 888 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து குன்றத்தூர் பேரூராட்சி, மூன்றாம் கட்டளையில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கட்டடத்தையும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் திறந்து வைத்தார்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.